# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 9,958 — 1949 ம் ௵ பங்குனிமீ 18 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## PART IV—நான்காம் பாகம்.

### காணி நிர்ணய முன்னறிவித்தலைக் குறித்த விளம்பரம்.

காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்.
இல. 2,452, (இரத்தினபுரி).

கீழ் குறித்த காணிகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாக தத்தமக்கு அக்காணிகளி லுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விபரங்களையும் 1949 ம் ௵ (எப்பிறல்) சித்திரை மாதம் 1 ந் தேதியிலிருந்து 3 மாசத்துக்குள் இதன் கீழ் கையொப்பமிட்டிருப்பவருக்குத் தெரிவிக்க தவறினால் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி இக்காணிகள் அரசாட்சியார் ஆட்சி ஒப்புக் கொண்டதாக நிராகரிக்கப்படுமென இத்தால் விளம்பரப்படுத்தியிருக்கிறது.

இரத்தினபுரிக் கச்சேரியில் 1949 ம் ௵ (பெப்ருவரி) மாசிமீ 22 ந் திகதி யில் வெளியிடப்பட்டது.

ஜீ. எல். டி. டேவிட்சன்,
சப்பிரகமுவ அரசாட்சி ஏசண்டு.

குறிப்பு.—(a) இக்காணிகளின் நிமித்தம் வேறு விபரங்கள் அறிய வேண்டுமானால் சப்பிரகமுவ அரசாட்சி ஏசண்டரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம். அவைகளின் படங்களும் சேர்வே இலாகா அதிகாரியிட மிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

(b) சொல்லப்பட்ட காணிகளுக்குள்ளேனும் அல்லது அவை ஒன்றுக் குள்ளேனும் போகும் பாதையில் உரித்து சாதித்தால் அக்காணியிலும் அல்லது அக்காணிகளிலும் உரித்து சாதிக்கத்தக்கது.

அட்டவணை.

சப்பிரகமுவா மாகாணத்தில், இரத்தினபுரி டிஸ்திறிக்கில், குக்குள் கோறளை உடபத்துவிலுள்ள பொத்துப்பிற்றிய என்னும் கிராமத்திலுள்ள பின்வரும் துண்டுகள் :—

பிரதமப்படத்து இல. A 528.

| துண்டு. | காணியின் பெயர் | | விபரம். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | கரவிற்ற ஹேனே (டி. ஆர். சி. பாதைக் கரையோரம்) | | சேனை .. .. | 0 | 1 | 26 |
| 2 | ஷை | .. | ஷை .. .. | 0 | 1 | 36 |
| 3 | கரவிற்றஹேனே | .. | சேனை .. .. | 1 | 0 | 15 |
| 4 | ஷை | .. | சேனை .. .. | 1 | 0 | 9 |
| 5 | ஷை | .. | ஒரு நிரந்தரமான கட்டடம் அடங் கிய சேனை | 1 | 0 | 9 |
| 6 | ஷை | .. | சேனை இதில் அரசாங்க வைத்திய சாலைக்காக ஒரு கட்டிடம் கட்டப் படுகின்றது | 3 | 1 | 30 |
| 7 | — | .. | டீ. ஆர். சி. பாதை .. | 0 | 0 | 30 |
| 8 | கரவிற்றஹேனே, (டீ. ஆர். சீ. பாதை யின் கரையோரம்) | | சேனை .. .. | 0 | 2 | 20 |

எல்லைகளாவன : வடக்கு. ஜந்திரிசுக்கும் மற்றவர்களுக்குமுரிய கரவிற்றஹேன ; கிழக்கு-ஜி. ஜந்திரிசுக்கும் மற்றவர்களுக்குமுரிய கரவிற்ற ஹேனே ; தெற்கு-ஜி. ஜந்திரிசுக்கும் மற்றவர்களுக்குமுரிய கரவிற்றஹேனே யும், கே. எ. சிறிவர்தனஹாமிக்கும் மற்றவர்களுக்குமுரிய கரவிற்றகேவத் தையும் ; மேற்கு-அரிசாட்சியாருக்குரிய (P. P. 2,434 விலிருக்கும் துண்டு M 35), காவிற்றகேவத்தையும், ஆர். சிங்கஹேனயாவுக்கும் மற்றவர்களுக்கு முரிய கரவிற்றஹேதெனயாவும், ஜி. ஜந்திரிசுக்கும் மற்றவர்களுக்குமுரிய கரிற்றஹேனேயும்.

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

கௌரவ விவசாய மந்திரி அவர்களால் கற்பிக்கப்பட்டபடியும், நிலம் வாங்குதற் சட்டத்தின் காப்சள் 203 னுள்ள 5 ம் பிரிவுப்படியும், களுத்துறை டிஸ்திறிக், களுத்துறை பாலிகா வித்தியாசாலையின் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமப்படத்து இல : A 2,329. குறிச்சி—வேலாப்புற களுத்துறை (நகரசபை எல்லைக்குட்பட).

| துண்டு. | காணியின் பெயர். | | விபரம். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | குறுந்துவத்த | .. | 32 தென்னைகளும், 2 பலாவும், 60 வயதுள்ள 2 மாமரங்களும், 20 வயதுள்ள ஒரு தென்னையும், 3 வயதுள்ள 2 மாமரங்களும், 26 வயதுள்ள கமுகுகளும், 2 வயதுள்ள ஒரு ஈரப்பலாவும், 2 தோடையும், 30 வயதுள்ள ஒரு கொடபொறமாமும், ஒரு வில்வமாமும், ஒரு புளியும், 10 வயதுள்ள 4 அன்னேண்ணுவும், 4 கொய்யா மரமும், ஒரு றுக்கத்தனேயும், ஒரு அட்டிக்காவும், 40 வயதுள்ள 2 வாகையும், ஒரு வயதுள்ள 30 வாழையும், 2 கற்கட்டுக் கிணறுகளும், 4 ஓடுபோடப்பட்ட கற்கட்டிடங்களும், 7 தற்கால்லிகக் கிடுகுமேய்ச்சல் நிலத்திற்கு சிமெந்திடப்பட்ட கட்டிடங்களுமுள்ள தோட்டம், இத்தோட்டம் பிரான்சிஸ் பீரிசும் மிஸ் ஜடா பீரிசும் ("மௌன்ற்", காலி) உரிமை எடுத்ததெனச் சொல்லப்படுகிறது. | 1 | 3 | 26·3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் விவசாய மந்திரியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 6 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1949 ம் ௵ (எப்பிறல்) சித்திரை மாதம் 25 ந் தேதியிலன்று முற்பகல் 10 மணிக்கு களுத்துறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மை யையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப் படுகின்றது.

களுத்துறைக் கச்சேரி,
1949 ம் ௵ (மார்ச்) பங்குனிமீ 14 ந் வ.

எஸ். எம். டவ்,
உதவி அரசாட்சி ஏசண்டு.


57——J. N. A 87688—111 (3/49)

கௌரவ விவசாய மந்திரி அவர்களின் கற்பனைப்படியும், நிலம் வாங்குதற்கு சட்டத்தின் காப்சன் 203 லுள்ள 5 வது பிரிவுப்படியும் களுத்துறை டிஸ்திறிக், களுத்துறை வித்தியாலயத்தின் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமப்படத்து இல : A 2,315. குறிச்சி—வேலாப்புற களுத்துறை, (நகரசபை எல்லைக்குட்பட்ட)

| துண்டு. | காணியின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|
| 1 | கோறலேவத்த, (களுத்துறை வித்தியாலயம் இருக்கும் காணி, கொழும்பு ரோட்டு, வீட்டு வரி, இல. 136 | 30 வயதுள்ள ஒரு முந்திரிமரம், 5 வயதுள்ள ஒரு கித்துல்மரம், 25 வயதுள்ள 2 கித்துல்மரம், 25 வயதுள்ள ஒரு கொண்டல்மரம், 5 வயதுள்ள ஒரு எலுமிச்சை, 100 வயதுள்ள ஒரு புளி, 30 வயதுள்ள ஒரு மொறமரம், 60 வயதுள்ள 171 தென்னைகள், 15-20 வயதுள்ள 96 தென்னை, 5-10 வயதுள்ள 57 தென்னை, 20 வயதுள்ள 3 ஈரப்பலா, 5-10 வயதுள்ள 7 ஈரப்பலா, 75 வயதுள்ள 4 பலா, 25 வயதுள்ள 3 பலா, 25 வயதுள்ள 4 தேக்கு, 50 வயதுள்ள ருக்கத்தன், 2 ஓடு போடப்பட்ட கட்டிடங்கள், 2 ஓடு போடப்பட்ட கபுக் மண் கட்டிடங்கள், 1 தகரத்தால் வேயப்பட்ட கட்டிடம், ஒரு கிடுகுவேய்ந்த கட்டிடம், ஒரு கிடுகுவேய்ந்த மரக்கட்டிடம், 2 கட்டுக் கிணறுகள், 3 கற்கட்டுத் தூண்களுள்ள தோட்டம், களுத்துறை, காலஞ்சென்ற டாக்டர் டீ. பீ. த அல்விஸ், உரிமைக்காரரால் சொந்தம் பாராட்டப்பட்டது எனத் தெரிகிறது, உரிமையாளர், மிசிஸ் டீ. ஆர். த அல்விஸ், டேவிட் சந்திர டி அல்விஸ், தேவதாச பேசில் டி அல்விஸ், எ. எஸ். த. அல்விஸ், ஆர். என். த அல்விஸ், என். எ. த அல்விஸ், இவர்கள், "உவில்பெர்ண்" பார்ண்ஸ் அவினியூ, மவுன்ற் லெவ்னியாவிலுள்ளவர்கள் | 4 3 28·3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் விவசாய மந்திரியவாகள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 6 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1949 ம் ஆு (எப்பிறல்) சித்திரை மாதம் 25 ந் தேதியினன்று முற்பகல் 11.30 மணிக்கு களுத்துறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

களுத்துறைக் கச்சேரி,
1949 ம் ஆு (மார்ச்) பங்குனிமீ 14 ந உ.

எம். எஸ். டல்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

கௌரவ விவசாய மந்திரி அவர்களின் கற்பனைப்படியும், நிலம் வாங்குதற் சட்டத்தின் கப்சன் 203 லுள்ள 5 வது பிரிவுப்படியும் களுத்துறை டிஸ்திறிக்கிலுள்ள அளுத்கமவிற்கு ஒரு பகிரங்க பஸ்காலை நிறுவுவதற்காக காணி வாங்குவதற்குரிய எத்தனம் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமப்படத்து இல : A 2,433. குறிச்சி—அளுத்கம மேற்கு, (அளுத்கம் பட்டின சபை எல்லைக்குட்பட).

| துண்டு. | காணியின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|
| 1 | முடில்லகஹவத்த, வீட்டு வரி இலக்கம் 20/2 ன் பகுதி, மெயின் ஸ்றீற் | 5 தென்னைகளும், 40 வயதுள்ள ஒரு ஈரப்பலாவும், ஒரு நிரந்தரமான கக்கூசும் உள்ள தென்னந் தோட்டம், அளுத்கம மேற்கிலுள்ள கல்மூலாகே மகினேனு பெர்ணுந்தோவுக்கும், வீரபுரகே அறிலிஸ் பெர்ணுந்தோவுக்கு முடைத்தாயிருந்ததெனச் சொல்லப்படுகிறது | 0 0 36·7 |
| 2 | முடில்லகஹவத்த, வீட்டு வரி இலக்கம் 28/1 ன் பகுதி, மெயின் ஸ்றீற் | 25 தென்னைகளும், ஒரு கொட்டன்மரம் 40 வயதுள்ள ஒரு றட்டகொறக்கமரமும், ஒரு புளியமரமும், 10 வயதுள்ள 2 அன்னேண்ணமரங்களும், ஒரு நிரந்தரமான கக்கூசும், இரு அத்தைக்கட்டிடங்களும், உள்ள தென்னந் தோட்டம், இத்தோட்டம் அளுத்காம மேற்கு வீரப்புரகே கோவிஸ் பெர்ணுந்தோவுக்கு உரிமையாயிருந்ததெனச் சொல்லப்படுகிறது | 0 1 7 |
| 3 | முடில்லகஹவத்த, வீட்டு வரி இல. 3/1, 3/4, 3, மெயின் ஸ்றீற் | 40 வயதுள்ள 2 தென்னைகளுள்ள தென்னந் தோட்டம், அளுத்கம மேற்குவாசிகளான லொக்கு கங்கானங்கே யோன் பீரிஸ், பயாகலபடல்கே கெபிரியல் சில்வா, வீரபுரகே கோவிஸ் பெர்ணுண்டோ ஆகிய இவர்களுக்கு உரிமையாயிருந்ததெனச் சொல்லப்படுகிறது | 0 0 3·8 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் விவசாய மந்திரியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 6 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1949 ம் ஆு (எப்பிறல்) சித்திரை மாதம் 25 ந் தேதியினன்று பிற்பகல் 2.30 மணிக்கு களுத்துறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

களுத்துறைக் கச்சேரி,
1949 ம் ஆு (மார்ச்) பங்குனிமீ 14 ந உ.

என். எம். டல்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

ஹுனுகெற்றியமடித்த சிங்களக் கலவன் பாடசாலை என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமப்படத்து இல : A 1,393. குறிச்சி—அத்தறகல்ல உடகம்மெத்த.

| துண்டு. | காணியின் பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | டெல்ககாலந்ததோட்டம் | றப்பர்மரங்களும், ஒரு கட்டிடமும், ஒரு மரக் குடிசையும் உள்ள தோட்டம் | ஜீ. எம். ருசறட்னம், கறந்துபொனே தோட்டம், கேகாலை .. | 4 3 21·5 |
| 2 | ஷை .. | றப்பரும், தென்னைமரங்களுமுள்ளதோட்டம் | ஷை .. .. .. | 0 0 22·8 |
| 3 | ஷை .. | றப்பர் தோட்டத்தின் பகுதி .. | ஜீ. எம். ருசறட்னம், கறந்துபொனே தோட்டம், கேகாலை, அடுத்த காணியின் சொந்தக்காரராகிய கே. ஜீ. நந்துவாவால் உரித்தின் பெயரால் தகராறுள்ளது) | 0 0 2·2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது (203 ம் அதிகாரம்) 5 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் விவசாய மந்திரியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 6 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1949 ம் ஆு (எப்பிறல்) சித்திரை மாதம் 21 ந் தேதியினன்று காலை 9.30 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1949 ம் ஆு (மார்ச்) பங்குனிமீ 15 ந உ.

சீ. ஆர். டபிள்யு. டி சில்வா,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

வத்தாறந்தனையிலிருந்து லேடி மக்கலம்ஸ் டிறைவ் பிரசித்த பாதை என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமப்படத்து இல : A 1,311. குறிச்சி—மாபனுவத்துற.

| துண்டு. | காணியின் பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 4 | வல்பியோவத்த, 6 ம் வட்டாரம் 27 ம் இலக்கப் பகுதி .. .. | தென்னை, மா மரங்களும் வேறு மரங்களும் உள்ள தோட்டம் .. | மிஸிஸ். எஸ். வல்பியோவ், மாபனுவத்துற | 0 0 23·4 |
| 5 | வலட்றன்ஸ், 6 ம் வட்டாரம், 25 ம் இலக்கப் பகுதி .. | தென்னைமரங்கள் உள்ள தோட்டம் .. | மிஸ். ஈ. வீரப்பெருமாள், மிஸ். எம். வீரப்பெருமாள், மாபனுவத்துற | 0 0 3·1 |
| 6 | பொள்வத்த, 6 ம் வட்டாரம், 25 ம் இலக்கப் பகுதி | பாதை .. .. | ஜே. றன்ஹொட்டி, 123 திருக்கோணமலை வீதி, கண்டி | 0 0 12·4 |
| 7 | வல்பியோவத்த, 6 ம் வட்டாரம், 25/3 ம் இலக்கப் பகுதி | மா, பாக்கு மரங்கள் உள்ள தோட்டம் | மிஸிஸ். எஸ். வல்பியேவ், மாப்பனுவத்துற .. | 0 0 16·1 |

| துண்டு. | காணியின் பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 8 | லிந்தவத்த, 6 ம் வட்டாரம் இலக்கம் 8 | கோப்பி, தென்னை மரங்கள் உள்ள தோட்டம் | உடுகம றட்னபால தேரோ, அஸ்கிரியா .. | 0 0 5·6 |
| 9 | பெள்வத்த, 6 ம் வட்டாரம் 10/1, 10/2 இலக்கப் பகுதி | வெண்நிலம் .. | .. .. ஜி. எச். எல். பெரேரா, முனிசிபல் ஆராச்சி, கண்டி | 0 0 6·4 |
| 10 | நிக்காகொல்ல, 6 ம் வட்டாரம் 6/2, 6/3 இலக்கப் பகுதி | மா, பாக்கு மரங்கள் உள்ள தோட்டம் .. | கங்காருழ பாடசாலை, கண்டி. (பாதுகாவளர் றம்புக்வல தம்மறக்கித கிரி சோபித்த மஹாநாயக்க தேரோ, மல்வத்தை விஹாற | 0 0 6·7 |
| 11 | பொள்வத்தை, 6 ம் வட்டாரம், 10 ம் இலக்கப் பகுதி | பாதை .. | .. அலிஸ் திலகரத்ன, லயனல் திலகரெத்ன, மாப்பனுவத்துற | 0 0 2·4 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி. காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது (203 ம் அதிகாரம்) 5 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் காணி விவசாய மந்திரியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 6 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1949 ம் ஆண்டு (ஏப்றில்) சித்திரை மாதம் 30 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு கண்டி கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விபரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி, 1949 ம் ஹூ (மார்ச்) பங்குனிமீ 15 ந் உ.

வீ. ஆர். டபுள்யு. டி. சில்வா, உதவி அரசாட்சி ஏசண்டு.

றங்கம பாடசாலை கட்டிடம் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமப்படத்து இல. A 1,377. குறிச்சி—சியம்பளகொ..

| துண்டு. | காணியின் பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | கல்கெற்றியாகெரகோப்புவ .. | கித்துல், பலா உள்ள வெள் நிலம் .. .. | ஏ. கே. சரிபுடீன் அலிம்சயிதி, டிப்பிற்றிய, அறநாயக்க | 0 0 23 |
| 2 | கல்கெற்றியாவத்த .. | தேயிலை, தென்னையுள்ள தோட்டம் .. .. | ஷை .. | 1 0 18.1 |
| 4 | ஷை .. | தேயிலை, பலா மரங்கள் உள்ள தோட்டம் .. .. | ஷை .. .. | 0 2 35.8 |
| 6 | ஷை .. | தேயிலை தோட்டம் .. .. .. | ஷை .. .. | 0 0 6.2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது (203 ம் அதிகாரம்) 5 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் காணி விவசாய மந்திரியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 6 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1949 ம் ஹூ (ஏப்பிறல்) சித்திரை மாதம் 30 ந் தேதியிலன்று காலை 11 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி, 1949 ம் ஹூ (மார்ச்) பங்குனிமீ 15 ந் உ.

சி. ஆர். டபிள்யு. டி சில்வா உதவி அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் திரியாய்ப் பள்ளிக்கூடம் பெருப்பிப்பதற்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமப்படத்து இல : A 893. குறிச்சி—திரியாய்.

| துண்டு. | காணியின் பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | வங்களாவளவு .. | 30 வருஷஞ்சென்ற 5 பனைவடலிகளுள்ள தோட்டம் .. .. | திரியாயிலிருக்கும் சு. அருணசலம் | 0 2 1·8 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 203 ம் அதிகாரம் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 5 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் விவசாய மந்திரியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 6 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1949 ம் ஹூ (ஏப்பிரல்) சித்திரை மாதம் 28 ந் தேதியிலன்று சாயந்திரம் 3.30 மணிக்கு திரியாய்க் கிராமக் கோட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

திரிகோணமலைக் கச்சேரி, 1949 ம் ஹூ (மார்ச்) பங்குனிமீ 10 ந் உ.

கே. வி. ரங்கநாதன், உதவி அரசாட்சி ஏசண்டுக்காக.

---

## காணி மீட்டற் சட்டம்.

### 1942 ம் ஆண்டின் 61 ம் இலக்கக் காணி மீட்டற் சட்டத்தின் நோக்கங்களுக்காகக் காணியைப் பெற்றுக்கொள்வதற்கான அறிவித்தல்.

களுத்துறைப் பகுதி உதவி மாகாண அதிபர், ஸ்டிவாட் மறே டவ் ஆகிய நான்—

(1) 1942 ம் ஆண்டின் 61 ம் இலக்கக் காணி மீட்டற் சட்டத்தின் நோக்கங்களுக்காக இதனகத்து அட்டவணையில் விவரிக்கப்பட்ட காணிகள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமெனக் காணிக் கொமிஷனர் நிர்ணயித்திருக்கின்றனரென்றும் குறித்த காணிகளைப் பெற்றுக்கொள்ள அரசினர் உத்தேசித்திருக்கின்றனரென்றும் ;

(2) அத்தகைய காணிகளில் உள்ள சகல சொத்துக்களுக்கும் நஷ்ட ஈட்டுக்காய விண்ணப்பங்கள் எமக்கு அனுப்பப்படவேண்டுமென்றும் ;

(3) அத்தகைய காணிகளில் சொத்தையுடைய சகலரும் களுத்துறைக் கச்சேரியில் 1949 ம் ஆண்டு (ஏப்பிறல்) சித்திரை மாதம் 25 ந் திகதி, முற்பகல் 9.30 மணிக்கு நேர்முகமாய் அல்லது பிரதிநிதிமூலம் எமக்குமுன்னர் சமுகமளித்து அத்தகைய காணிகளில் அவரவர்க்குரிய சொத்தைகளையும் அத்தகைய சொத்தைகளுக்காய நஷ்டஈட்டின் தொகையையும் விவரங்களையும் கொடுக்க வேண்டுமென்றும் ;

காணி பெறுதற் சட்டத்தின் 6 ம் பிரிவின்படி இத்தால் பகிரங்க அறிவித்தல் கொடுக்கின்றேன்.

களுத்துறைப் பகுதி, 1949 ம் ஹூ (மார்ச்) பங்குனிமீ 14 ந் உ.

எஸ். எம். டவ், உதவி மாகாண அதிபர்.

அட்டவணை.

ஆரம்பப்பட இலக்கம் A 2,444. கிராமம்—பனுப்பிட்டிய.

| துண்டு. | காணியின் பெயர். | விபரம். | சொத்தைகேட்பவரின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | பொள்கொட்டுவாவத்தை | 26 வயதுள்ள ரப்பரும், கறுவாவும், ஓட்டால் வேயப்பட்ட ஓர் மேசன் கட்டிடமும், அதைச்சேர்ந்த ஓர் தற்காலிக மண்ணால் கட்டப்பட்ட சுவரும், கிடுகால் வேயப்பட்ட கூரையும் உள்ள கட்டிடத்தைக்கொண்ட ஓர் நெல்வயல் | நாயகே பௌலிஸ் பெர்னண்டு, மேற்பார்வை என். பொறேலிஸ் பெர்னண்டு அன். கொம்பெனி, முதலாம் குறுக்குத்தெரு, பெற்று, கொழும்பு | 7 1 35 |
| 2 | பனுபிற்றிடேனிய அல்லது பொள்கொட்டுவாவத்த | 26 வயதுள்ள 5 ரப்பர்மரம் கொண்டது .. .. | ஷை .. .. | 0 0 4 |

## வைத்திய சுகாதாரப்பகுதி.

### மருத்துவப் பயிற்சி.

பதினெட்டு மாத மருத்துவப்பயிற்சி பெற விரும்பும் பெண்கள் தங்கள் விண்ணப்பப்பத்திரங்களை 1949 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 12 ந் திகதி அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கும்படி வைத்திய சுகாதாரப் பிரதமத் தலைவருக்கு அனுப்பவேண்டும்.

2. விண்ணப்பம் செய்வோரின் (அ) வயது: 1949 ம் ஆண்டு ஒக்ற்றோபர் மாதம் 1 ந் திகதியன்று 20 க்கு மேலும், 30 க்குக் கூடாமலும் இருக்க வேண்டும்; (ஆ) அவர்கள் ஆங்கிலத்திலேனும் சிங்களத்திலேனும் அல்லது தமிழிலேனும் கனிஷ்ட தராதரப் பரீட்சையில் தேறியிருக்க வேண்டும்; அன்றேல் வித்தியாபகுதியாரால் அங்கீகரிக்கப்பட்ட சமமான அல்லது மேலான வேறு பரீட்சையில் தேறியிருக்கவேண்டும்; (இ) வித்தியாபகுதியாரால் இனிமேல் கனிஷ்ட தராதரப்பரீட்சை நடாத்தப்படமாட்டாதாகையால் மனுச்செய்வோர் தலைமை உபாத்தியாயரிடமிருந்து தாங்கள் அப்பாடசாலையால் நடாத்தப்பட்ட கனிஷ்ட தராதரப்பரீட்சையில் 1944 ம் ஆண்டின்பின் ஆங்கிலத்திலும், 1945 ம் ஆண்டின்பின் சிங்களத்திலேனும் தமிழிலேனும் சித்தியடைந்தவர்களென நற்சாட்சிப்பத்திரம் வாங்கி அனுப்பவேண்டும்.

3. விண்ணப்பங்களைக் குறிக்கப்பட்ட முறையில் தயாரித்துச் சமர்ப்பிக்க வேண்டும். மாதிரிப்பத்திரங்களை 1949 ம் ஆண்டு மார்ச் மாதம் 18 ந் திகதி பிரசுரிக்கப்படும் "கெசெற்" பத்திரிகையில் காணலாம்.

4. விண்ணப்பம் செய்வோருக்கு கீழ்க்குறிக்கப்பட்ட பாடங்களில் ஓர் போட்டிப் பரீட்சை நடாத்தப்படும் :—

(அ) இலேசான ஒரு விஷயத்தைப்பற்றிய வியாசம்.
(ஆ) இலங்கைச் சரித்திரம்.
(இ) இலங்கைப் பூமிசாஸ்திரம்.

பரீட்சைப் பிரவேசக் கட்டணம் ரூபா 2·50. இக்கட்டணத்தை அனுப்பும்படி அறிவித்தாலன்றி விண்ணப்பக்காரர் அனுப்பப்படாது.

5. இப்போட்டிப் பரீட்சையில் பெற்ற புள்ளியின்படி தேவைப்பட்ட தொகையினர் 1949 ம் ஆண்டு ஒக்ற்றோபர் மாதத்திலும் 1950 ம் ஆண்டு ஜனவரி, ஏப்பிரல், ஜுலை மாதங்களிலும் நடக்கவிருக்கும் பயிற்சி வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். தெரிவு செய்யப்பட்டவர்கள் தேக சுகத்தில் தகுதியெனக் காணப்பட வேண்டும்.

6. இப்பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டவுடன் ஒவ்வோர் பெண்ணும் பயிற்சி முடிந்ததும் இவ்விலாகாவில் மூன்று வருட காலத்திற்குக் கடமை யாற்றுவேனென ஓர் உடன்படிக்கை எழுதவேண்டும்.

7. மனுப்பத்திரத்தை யனுப்பும் உறையில் இடது பக்கத்து மூலையில் "மருத்துவப் பயிற்சிக்கு மனு" என்று எழுதி வைத்திய சுகாதாரப் பகுதி பிரதம தலைவர், தபால் பெட்டி இல. 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்பவேண்டும்.

8. எனக்கேனும், அல்லது இப்பகுதியிலுள்ள வேறெவற்கேனும், பெயர் குறித்த விண்ணப்பப்பத்திரங்களை அனுப்பப்படாது.

ஜே. ஏ. சிரிவார்தன,
அக்டிங் வைத்திய சுகாதார பிரதம தலைவர்.

கொழும்பு,
1949 ம் ஸ்ரீ (மார்ச்) பங்குனியீ 10 ந் உ.

அட்டவணை 1.

### வைத்திய சுகாதாரப்பகுதி.

### மருத்துவச் சேவை.

### மருத்துவத்தாதி மாணவிகளின் பயிற்சி வகுப்புக்காக விண்ணப்பப் பத்திரம்.

மருத்துவத் தாதி மாணவிகளாகச் சேரவிரும்பும் பரீட்சார்த்திகள் கீழே கேட்கப்பட்ட விபரங்களைக் கொடுக்கவேண்டும். இப்பத்திரத்தைப் பிழையின்றி நிரப்பவேண்டிய அத்தாட்சிப்பத்திரங்களுடன் சித்திரை மாதம் 28 ந் திகதிக்குமுன் அனுப்பவேண்டும். அப்படி அனுப்பாதவர்களுடைய பத்திரங்கள் கவனிக்கப்படமாட்டா :—

1. முழுப் பெயர் : ————.
2. விலாசம் : ————.
3. பிறந்த திகதியும் ஆண்டும் : ————.
   (பிரதி அணைக்க வேண்டும்)
4. பாடசாலையும், சித்தி அடைந்த சோதனையும் : ————.
5. சாகியம் (தமிழ், சிங்களம்) : ————.
6. சமயம் : ————.
7. விவாகம் செய்ததா அல்லவா : ————.
8. விவாகம் செய்தால் புருஷன் இருக்கிறதா? எத்தனை பிள்ளைகள். பயிற்சிக்கு ஏடுபட்டால் அவர்களை யாருடன் விட முடியும் : ————.
9. தலைமை உபாத்தியாயரிடமிருந்து எவ்வகுப்பில் சித்தி அடைந்திருக்கிறீரென சாட்சிப்பத்திரம் வாங்கி அணைக்கவும் : ————.
10. இரண்டு நற்சாட்சிப்பத்திரங்களின் பிரதிகள் அணைக்கவேண்டும் : ——.
11. தகப்பனுரின் அல்லது பராமரிப்புகாரனின் பெயரும், விலாசமும் : ————.
12. இதற்கு முன்னர் ஆற்றிய அரசாங்க சேவை ஏதுமிருப்பின் : ————.
13. கீழ்க் குறிக்கப்பட்ட நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளுகிறீரா : ————.

அரசாங்க சேவையிலிருந்து எப்பொழுதேனும் தொழில் திறமையின்மை காரணமாக இளைப்பாற்றப்படவோ அல்லது தொழிலிலிருந்து நீக்கப்படவில்லையென்றும் கோட்டில் கிறிமினல் குற்றச்சாட்டுக்காக குற்றவாளியெனக் காணப்படவில்லையென்றும் இத்தால் நான் உறுதிமொழி அறிக்கிறேன்.

————,
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

அட்டவணை 2.

### மருத்துவ வேலை.

### சேவை நிபந்தனைகள்.

1. தேவையான மாணவ தாதிகளைத் தெரிவு செய்வதற்கு ஒரு போட்டிப் பரீட்சை சிங்களத்திலேனும், தமிழிலேனும் நடாத்தப்படும். இப்பரீட்சை கீழ்க்காணும் இடங்களில் நடாத்தப்படும் :—

கொழும்பு, காலி, கம்பஹா, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, நீர்கொழும்பு, பாணந்துறை, வியாங்கொடையாவன.

மேற்சொல்லப்பட்ட இடங்கள் எவற்றிலேனும் 50 க்குக் குறைந்த விண்ணப்பக்காரர் பதியப்பட்டால், அவ்விடங்களில் சோதனை வைக்கப்படமாட்டாது. அவ்விண்ணப்பக்காரர், அவர்களுக்குக் கிட்டிய அடுத்த இடத்திற்குப் பதிவு செய்யப்படுவார்கள். சோதனை வைக்கப்படும் இடங்கள் பிரவேசப் பத்திரத்தில் குறித்து அனுப்பப்படும்.

2. விண்ணப்பஞ் செய்வோர் 1949 ம் ஆண்டு ஒக்ற்றோபர் மாதம் முதலாந் திகதியில் 20 வயதுக்கு மேற்பட்டும் 30 வயதுக்குக் கீழ்ப்பட்டும் இருக்க வேண்டும்; கீழ்க் கூறியபடி இலங்கையராக இருக்கவேண்டும் :—

(அ) இலங்கைச் சந்ததிகளாய் அல்லது இலங்கைப் பிரஜையென பதிவு பதிவு செய்யப்பட்டவர்கள்,

(ஆ) இலங்கைப் பிரஜையாவதற்கு மனுச்செய்தும், அவர்களுக்கு அப்படியாவதற்கு உரிமையுள்ளவர்களென, பாதுகாப்பு மந்திரியால் ஏற்றுக்கொள்ளப்பட்டோரும்.

3. நல்ல கல்வி கற்றதற்கு நற்சாட்சிப்பத்திரம் காட்டவேண்டும்; குறைந்தது ஆங்கிலத்தில் அல்லது சிங்களத்தில் அல்லது தமிழில் கனிஷ்ட தராதரப் பரீட்சையில் தேறியிருக்க வேண்டும் அல்லது வித்தியாபகுதியால் அங்கீகரிக்கப்பட்ட சமமான வேறு சோதனையில் அல்லது மேலான சோதனையில் தேறியிருக்கவேண்டும்.

4. மேற்கூறிய இலக்கணமமைந்தோர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்; கனிஷ்ட தராதரப் பரீட்சையின் தரத்திற்கு ஏற்ற போட்டிப் பரீட்சைக்கு நேர்முகப் பரீட்சையிலிருந்து ஆட்கள் தெரிவுசெய்யப்படுவார்கள். போட்டிப் பரீட்சைப் பாடங்களாவன: (அ) இலேசான ஒரு விஷயத்தைப் பற்றிய வியாசம், (ஆ) இலங்கைச் சரித்திரம், (இ) இலங்கைப் பூமிசாஸ்திரம்.

சோதனைப் பிரவேசக்கட்டணம் ரூபா 2·50.

5. போட்டிப் பரீட்சையில் பெற்ற புள்ளியின்படி தேவைப்பட்ட தொகையினர் மாத்திரம் மருத்துவப்பயிற்சி வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்; பின்னொரு வகுப்புக்காகத் தெரிவுசெய்து வைக்கப்படமாட்டார்கள். தெரிவு செய்யப்பட்டோர் எல்லா விதங்களிலும் தேக சுகத்தில் தகுதியெனக் காணப்பட வேண்டும். கொழும்பிலுள்ள "டீ சொய்சா" பிரசவ வைத்தியசாலையில் ஒரு வருடத்திற்குப் பயிற்றப்படுவார்கள் வாசஸ்தானம் கொடுக்கப்படும். ஒரு வருடப் பயிற்சி அனுகூலமாக முடிந்தவுடன், சுகாதார அமைப்பு ஸ்தானத்தில் இன்னொரு ஆறு மாதத்திற்குப் பயிற்றப்படுவார்கள். பயிற்சிக் காலத்தில் எப்பொழுதாவது திருப்தியளியாதவர்கள் வகுப்பிலிருந்து விலக்கப்படுவார்கள்.

6. முழுப் பயிற்சியும் அனுகூலமாக முடிந்தபின் 1927 ம் ஆண்டின் 26 ம் சட்டத்தின் 54 ம் பிரிவின்கீழ் பதிவுசெய்துகொள்ளலாம். பதிவுசெய்துகொண்ட எல்லா மருத்துவப் பெண்களுக்கும் உத்தியோகம் கொடுப்பதாக அரசாங்கம் உத்தரவாதம்பண்ணமாட்டாது; ஆனால் இடங்கள் காலியாகவா பதிவுசெய்துகொண்ட எல்லாம் மருத்துவப் பெண்களுக்கும் நிலையான உத்தியோகம் கொடுபடும்.

7. இப்பயிற்சிக்குத் தெரிவுசெய்யப்பட்டவுடன் ஒவ்வோர் பெண்ணும் பயிற்சி முடிந்ததும் இவ்விலாகா பகுதியில் மூன்று வருஷகாலத்திற்கு கடமைசெலுத்துவேனென ஓர் உடன்படிக்கை எழுதவேண்டும்.

### சம்பளமும் படியும்.

**பயிற்சிபெறும் மருத்துவப் பெண்கள்.**—பிரசவ ஆசுப்பத்திரியில் 12 மாதம் பயிற்சி பெறும்பொழுது வாசஸ்தானம் இலவசம்; வருடம் ரூபா 420. சுகாதார அமைப்பு ஸ்தானத்தில் 6 மாதம் பயிற்சி பெறும்பொழுது வருடம் ரூபா 420 விகிதம் கொடுக்கப்படும்.

**மருத்துவப் பெண்கள்.**—வருடமொன்றுக்கு ரூபா 612—18—936. அரசினருக்குரிய வாசஸ்தானம் கிடைக்காவிட்டால், நிதிப் பிரமாணங்களிற் கூறப்பட்ட வீட்டு வாடகைப்பணம் கொடுக்கப்படும்—நாளொன்றுக்கு 10 மணித்தியாலங்களுக்குமேல் வேலை செய்தால் வருடத்துக்கு ரூபா 120 மேலதிகமான வேலைச்சம்பளமாகக் கொடுக்கப்படும்.

மருத்துவப் பெண்கள் இளைப்பாற்றுச் சம்பளத்துக்கு உரித்துடையவராகார்கள். ஆனால் அவர்கள் பகிரங்க சேவைச் சேமநிதிக்கு (1942 ம் ஆண்டின் 18 ம் இலக்கச் சட்டத்தின்படி) தமது சம்பளத்தில் 5 விகிதம் கொடுக்க வேண்டும்.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.